# DEPOSITION OF WITNESS

**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARANTHANGI**

**Calendar**

**Miscellaneous**

**Preliminary Register** **CC.165/17**

**Sessions**

| | | |
|---|---|---|
| **Deposition of witness for** | அ.சா1 | **Caste** |
| **NAME** | **வசந்தா** | **Calling** |
| **Father's Name** | | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03-01-2019.

**முதல் விசாரணை**

நான் எட்டயத்தலி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பெட்டிக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 17.04.2017ம் தேதி நான் மருதகுடியில் சுப்பையா தேவர் என்பவருக்கு சொந்தமான கட்டிடத்தில் பெட்டிகடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 17.04.17ம் தேதி இரவு 8 மணி அளவில் எனது கடையை பூட்டிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். எனது பெட்டிக்கடை பக்கத்தில் செல் ரீசார்ஜ் கடை ஒருவர் வைத்திருந்தார். அவரும் மேற்படி தேதியில் கடையை பூட்டிவிட்டு வீட்டிற்கு சென்று விட்டார். பின்பு மறுநாள் 18.04.17ம் தேதி காலை 6 மணிக்கு எனது பெட்டிக்கடையை திறப்பதற்காக வந்து பார்த்தபோது எனது பெட்டிக்கடையின் கதவை உடைத்து சில்வர் டப்பாவில் சில்லரையாக ரூ.200 வைத்திருந்ததை யாரோ எடுத்து சென்றுவிட்டார்கள். அதற்கு பக்கத்தில் உள்ள கடையிலும் கதவு உடைக்கப்பட்டு இருந்தது. அவரது கடையில் செல் மற்றும் ரீசார்ஜ் கூப்பன்கள் மற்றும் பணம் ஆகிவற்றை காணவில்லை என்று கூறினார். நான் பிறகு பக்கத்து கடைகாரருக்கு போன் செய்து வரசெய்து 19.04.17ம் தேதி திருட்டு சம்மந்தமாக அறந்தாங்கி காவல் நிலையத்தில் புகார் கொடுக்க நானும் உடன் இருந்தேன். பின்பு போலீஸார் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். நடந்ததை சொன்னேன்.

குறுக்கு விசாரணை

என் கடைக்கு அருகே நான்கு கடைகள் உள்ளது. பக்கத்து கடையில் நேரடியாக சென்று திருட்டு சம்மந்தமாக நான் தெரிந்துகொள்ளவில்லை.

## DEPOSITION OF WITNESS

**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARANTHANGI**

**Calendar**

**Miscellaneous**

**Preliminary Register** **CC.165/17**

**Sessions**

| | | | |
|---|---|---|---|
| **Deposition of witness for** | அ.சா2 | **Caste** | |
| **NAME** | **சிவக்குமார்** | **Calling** | |
| **Father's Name** | | **Religion** | |
| **Village** | | **Age** | |
| **Taluk** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03-01-2019.

**முதல் விசாரணை**

நான் மருதகுடி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்தஊர் பேராவூரணி பக்கத்தில் உள்ள கொன்றைகாடு ஆகும். மருதகுடி சொசைட்டி பஸ்டாப் அருகே உள்ள சுப்பையா என்பவருக்கு சொந்தமான கட்டிடத்தில் கிளமர் என்ற பெயரில் சலூான் கடை தொழில் செய்து வருகிறேன்.ல் புகார் கொடுக்க நானும் உடன் இருந்தேன். பின்பு போலீஸார் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். நடந்ததை சொன்னேன். எனது கடைக்கு பக்கத்தில் ஜெயராமன் என்பவர் செல் கடை வைத்து தொழில் செய்து வருகிறார். வசந்தா என்பவர் மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறார். தற்போது டீக்கடையும் ஒன்று உள்ளது. 17.04.17ம் தேதி இரவு 8 மணி அளவில் எனது கடையை பூட்டிவிட்டு வீட்டிற்கு சென்று விட்டேன். 18.04.17ம் தேதி காலை 6.30 மணி அளவில் நான் வந்து பார்த்தபோது . ஜெயராமன் என்பவருக்கு சொந்தமான கடையும், வசந்தா என்பவருக்கு சொந்தமான கடையும் கதவின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. ஜெயராமன் என்பவருக்கு போன் செய்து விவரம் சொன்னபோது. அவர் கோவிலுக்கு சென்று உள்ளதாகவும் நான் வந்து பார்த்து கொள்கிறேன் என்று சொன்னார். பின்பு வசந்தா என்பவரும் சொந்தமான கடையில் ரூ.200 பணம் காணாமல் போயி இருந்தது. ஜெயராமன் என்பவரது கடையில் 3 செல்போன்கள் ரீசார்ஜ் கூப்பன்கள் காணாமல் போயி இருந்தது . மேற்படி சம்பவம் தொடர்பாக அறந்தாங்கி காவல் நிலையத்தில் ஜெயராமன் என்பவர் புகார் கொடுத்தார். பின்பு போலீஸார் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். நடந்ததை சொன்னேன்

குறுக்கு விசாரணை

என் கடைக்கு அருகே நான்கு கடைகள் உள்ளது. பக்கத்து கடையில் நேரடியாக சென்று திருட்டு சம்மந்தமாக நான் தெரிந்துகொள்ளவில்லை.